

# கல்வி உளவியல்

## விகொட்ஸ்கியின்

## அறிகை விருத்திக் கோட்பாடு

**Mr K.Sivakumar**
**Lecturer**
**National College of Education**
**Vavuniya**

# விகொட்ஸ்கி

## (Lev Semenovich Vygotsky 1896-1934)

இவர் ரஷ்ய நாட்டு உளவியல் மொழி அறிஞர் ஆவார். அறிகை செயன்முறை வளர்ச்சியுடன் மொழி, சிந்தனை என்பன எவ்வாறு தொடர்புடையன என்பதையும், மொழி சமூக இடைத்தாக்கங்களுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதையும் காட்டுதல் தொடர்பாக பல உளவியல் ஆய்வுகளை தனது மகள் மற்றும் குழந்தைகள், பிள்ளைகளிடம் மேற்கொண்டார். விகொட்ஸ்கியின் முக்கிய பணியானது அபிவிருத்தி உளவியல் பிரிவில் இருந்தது. எனினும் சமூக உளவியல் சூழலில் தனிப்பட்ட மனித உறவுகள் மற்றும் செயல்களால் மானிட உளவியல் வளர்ச்சியானது மேம்பட்டுள்ளது என்பதை உணர்ந்திருந்தார்.

1930 களில் கேர்ட் லெவினின் களக்கொள்கையின் தாக்கத்திற்குள்ளான விகொட்ஸ்கி "புதிய அறிவை உருவாக்குவதற்கான இடம்" (A place to create new knowledge ) என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்தினார். பின்னர் அந்தக் கோட்பாடு கற்பித்தல் படிநிலை வளர்ச்சி மாதிரியின் வளர்ச்சியில் மிகுந்த பயனளிப்பதாக இருந்தது. 1980 களின் பின், கல்வியாளர்களிடையே ஜீன் பியாஜேயின் (1896-1980) இன் அபிவிருத்தி உளவியலின் செல்வாக்கு சரியத் தொடங்கி, அதற்கு மாறாக "புதிய அறிவு உருவாவதற்கான இடம்" என்ற விகொட்ஸ்கியின் கருத்து கல்வி உளவியலில் புதிய தத்துவங்களின் வளர்ச்சிக்கு முக்கிய மையமாக அமைந்தது.

# விகொட்ஸ்கியின் அறிகை விருத்தி பற்றிய கருத்துக்கள்

- அகநிலைப் பேச்சு (Egocentric talk)

பல நிறங்களைக் கொண்ட கற்களை வேறுபடுத்தி வைக்குமாறு பிள்ளைகளை விகொட்ஸ்கி கேட்டிருந்தார். பிள்ளைகள் அவ்வாறு கற்களை வேறுபடுத்திக் கொண்டிருந்த போது, அவ்வேலை தொடர்பாக தமக்குத் தாமே பேசிக் கொண்டிருந்தமையை அவதானித்தார். இதனையே அகநிலைப் பேச்சு என அழைத்தார். பிள்ளைகள் வளரும் போது இந்நிலை தாமாக மறைகின்றது எனவும் இதற்குக் காரணம் மொழி சிந்தனைமயப்படுவதாகும் எனவும் குறிப்பிடுகிறார். எனவே சிந்திப்பதற்கு மொழி அவசியம் என வலியுறுத்தினார்.

- **தாய்மொழி**

அறிகை விருத்தியில் தாய்மொழி முக்கிய இடம் வகிக்கிறது. சமூகத்தில் நடைபெறும் பல அடிப்படை இடைவினைகளுக்கு தாய்மொழி இன்றியமையாதது. வீட்டிலும், சமூகத்திலும், வேலைத்தலத்திலும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், மனித நடத்தைகளைப் புரிந்து கொள்ளவும் மொழி உதவுகின்றது.

- **விளையாட்டு**

சிறார்களின் விளையாட்டினை அவர்களின் வழிநடத்தும் செயற்பாடாக அடையாளம் கண்டார். விளையாட்டானது பள்ளி முன்பருவத்தினரின் மனவெழுச்சி, உள இயக்கம், அறிவு சார்ந்த வளர்ச்சியின் முதன்மையான மூலமாக இருப்பதை வலியுறுத்தினார்.

- **அறிகை விருத்தியில் வளர்ந்தோரின் பங்கு**

வளர்ந்தவர்களுடனும், தம்மிலும் அறிவாற்றல் மிக்கோரிடத்தும் இடைவினை கொள்வதன் வாயிலாகவே சிறுவர்களால் சிறந்த முறையிலே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். ஆரம்ப நிலைகளில் சிறாரின் பிரச்சினைகளை விடுவிப்பதிலே வளர்ந்தோரின் பங்கு பெரிய அளவிலும் சிறாரின் பங்கு குறைந்த அளவிலும் காணப்படுகிறது. சிறார் சுதந்திரமாகத் தொழிற்பட்டு பிரச்சினைகளுக்குத் தாமே தீர்வுகளை உருவாக்கும் வரை வளர்ந்தோரின் கடமையும் பொறுப்பும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

- **சூழல் செல்வாக்கு**

சமூகச் சூழலின்றி, பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்தியோ மொழி விருத்தியோ ஏற்படுவதில்லை. எண்ணக்கருக்கள், மொழி, ஞாபகம், அவதானம் போன்ற அறிவுசார் பண்புகள் கலாசார செயல்களாக இருப்பதுடன் பிள்ளைகள் ஏனைய தனியாட்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் இடைவினைச் செயற்பாடுகளின் வளர்ச்சியுடன் அவை வளர்ச்சியடைகின்றன.

- **குழுவேலை**

சிந்தனை விருத்திக்கு குழுவேலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். குழு வேலையில் பிள்ளைகள் ஈடுபடுவதால் சில பிள்ளைகள் ஏனையோரை விட விரைவாகச் செய்வதோடு, அக்குழுவில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அவ்விடயம் பற்றிக் கற்பதற்கான ஆற்றலை உயர்த்துவதற்கு உதவுவார்கள்.

- **மொழிக்கும் சிந்தனைக்குமிடையிலுள்ள தொடர்பு**

தொடக்கத்தில் குழந்தையிடம் மொழியும் சிந்தனையும் வெவ்வேறு காலத்தில் தோன்றுகின்றன. பிறந்த குழந்தை மொழியின்றியே முதலில் சிந்திக்கிறது என்பது விகொட்ஸ்கியின் கருத்து.

உதாரணம்:- குழந்தையின் அழுகை பெரியவர்களின் கவனத்தைக் கவர்ந்திட குழந்தை எழுப்பும் ஒலி(சிந்தனை) என்பது இவரின் கருத்து.

மொழியும் சிந்தித்தலும் தனித்தனியான இரண்டு வேறுபட்ட அடிப்படைகளில் இருந்து எழுவன என்றும், அவை இரண்டின் இணைப்பும் முழுமையானதன்று என்றும் கருதுகிறார்.

சிந்தனை, மொழி ஆகியவற்றின் இணைப்பில் கீழ்க்காணும் நிலைகளைக் குறிப்பிடுகிறார்.

1. மொழித் தொடர்பற்ற சிந்தனை.
2. மொழி வழியே சிந்தனை செயற்படுதல்.
3. சிந்தனை தொடர்பற்ற பேச்சு அதாவது பொருளறிவின்றி மனப்பாடம் செய்து ஒப்புவித்தல்
4. சிந்தித்து பொருளறிவோடு பேசுதல்.


- **உளக்கருவி (Mental Tool)**


பிரதான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய உளக்கருவிகளை ஒருவர் வாழும் பண்பாடு உருவாக்கிக் கொடுக்கும் என்பது அவரின் கருத்து.

உதாரணம்:- மொழி, கணித முறைமை, விஞ்ஞான முறைமை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

## ▪அண்மை விருத்தி வலயம்
## (Zone of Proximal Development)

அண்மை விருத்தி வலயம் என்பது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் சந்தர்ப்பத்தில் ஒரு பிள்ளைக்கு உதவியின்றி அடையக்கூடிய நிலைமைக்கும் வளர்ந்தவரின் அல்லது சமவயதுள்ள ஒருவரின் உதவியுடன் அடையக்கூடிய நிலைமைக்கும் இடையில் காணப்படும் வேறுபாடாகும். அண்மை விருத்தி வலயத்தின் தாழ் எல்லையில் உள்ள பிரச்சினைகளை சிறார் தாமாகவே முயன்று தீர்க்கக் கூடியதாக இருக்கும். உயர் எல்லையில் உள்ள பிரச்சினைகளை ஆற்றல் மிக்கோரின் அனுசரணையுடன் தீர்க்கக்கூடியதாக இருக்கும்.


Teacher
or
parent
Learned tasks
Child's inner voice
INTERACTION
Zone of proximal development
Tasks not yet
in the learner's
repertoire of
abilities
Tasks at the limit of
the learner's abilities


Learning is Too Hard: Anxiety
Learning to Automatization
Zone of Proximal Development
Independent Learning
Learning Happens w/ Guided Assistance/Scaffolding
New Concept
Learning is Too Easy: Bordom
© Dr. Erica Warren http://learningspecialistmaterials.blogspot.com/

- **கற்பித்தல் முறை**

பிரச்சினை விடுவிப்பதற்கான ஆற்றலைத் தூண்டிவிடும் இடைவினைச் செயற்பாடுகளை ஆசிரியர்கள் முன்னெடுத்தல் வேண்டும். மாணவர்களின் துலங்கல்களுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் கற்பித்தல் உபாயங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சிறுவர்களுக்கான கற்றல் கற்பித்தல் இடைவினையை ஆசிரியர்கள் அல்லது வளர்ந்தோர் திட்டமிட்டு நெறிப்படுத்தும் செயற்பாடு "உறுதுணை மாறுகை" அல்லது "சாரங்கட்டுதல்" (Scaffolding) எனப்படும். அறிவை படிமுறையாக கட்டுமானம் செய்தல் இங்கு வலியுறுத்தப்படுகிறது.


# சாரங்கட்டல் கற்றல் அணுகுமுறை

# Vygotsky's Constructivist Approach



# Zone of Proximal Development

# அண்மை விருத்தி வலயம்



# Scaffolding learning



# நன்றி